# பாடம் 9: கரிகாலன் கட்டிய கல்லணை

## அ) வினாக்களுக்கு ஏற்ற விடையளிக்க

Question 1.
கரிகாலனின் இயற்பெயர் என்ன?
Answer:
கரிகாலனின் இயற்பெயர் வளவன்.

Question 2.
கரிகாலன் என்று பெயர் வரக் காரணம் என்ன?
Answer:
கரிகாலன் என்பதற்குக் கருகிய காலை உடையவன் என்பது பொருள். இளம் வயதில் இவருக்கு ஏற்பட்ட தீவிபத்தின் காரணமாக இப்பெயர் இவருக்கு வழங்கலாயிற்று.

Question 3.
கரிகாலன் கல்லணையைக் கட்ட காரணம் யாது?
Answer:
காவிரியில் அடிக்கடி பெருவெள்ளம் வரும். ஆனால் அந்த நீர் எதற்கும் பயன்படாமல் கடலுக்குச் சென்றுவிடும். மக்கள் மழைக்காலத்தில் வெள்ளப்பெருக்காலும், கோடைக்காலத்தில் நீர் இன்றியும் மக்கள்

துயரப்பட்டதைக் கண்டு அதனைத் தடுக்கும் பொருட்டு பெரியதோர் அணையைக் கட்டினான்.